**தலைப்பு 192 – சட்டம், சமாதானம் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 192 – சட்டம், சமாதானம் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 யூன் 22 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2 கணக்குகள்

---

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

அமைச்சிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 9,438.11 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 8,048.46 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 1,389.65 மில்லியன் அதாவது 14.72 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 7,466.72 | 7,042.56 | 424.16 | 5.68 |
| மூலதனம் | 1,971.39 | 1,005.90 | 965.49 | 48.98 |
| மொத்தம் | **9,438.11** | **8,048.46** | **1,389.65** | **14.72** |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 19201 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | அதிகூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 210.00 | 71.53 | 90.30 | 108.16 | 400.00 | 129.16 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 72.25 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்குகளின் இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0002/0141/000 | 4.73 |
| 6000/0000/00/0013/0096/000 | 3.51 |
| 6000/0000/00/0013/0095/000 | 0.02 |
| 6000/0000/00/0001/0101/000 | 1.97 |
| 6000/0000/00/0016/0087/000 | 62.02 |
| மொத்தம் | 72.25 |

**2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

சட்டம், சமாதனம் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**3.1.1 பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 33 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 61,270,000 தொகையான நிதிஏற்பாடு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பயன்படுத்தப்படாது மொத்த நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 20 செலவின விடயங்களுக்கு மிகை நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அச்செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டின் 10 சதவீதத்திற்கும் 89 சத வீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சளவினைக் கொண்டிருந்தது.

(இ) 04 செலவின விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் நிதிஏற்பாடு பெறப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவில்அந்த நிதிஏற்பாட்டை பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டிலிருந்து பெறப்பட்ட நிதிஏற்பாட்டில் 23 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,458,874 ஆக இருந்ததுடன் அந் நிலுவை கடன் மீதிகளில் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,767,022 கூட்டுமொத்தமான நிலுவைக் கடன் மீதியை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பற்றாக்குறைகள் வெளிப்படுத்தப்பட்டன.

**விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்படுத்தப்பட்ட வகையில் 03 விஷேட பணி படையணி முகாம்களின் பொருத்து கட்டிடங்களை நிர்மாணித்தல் விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்படுகின்றமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| முகாம் | மொத்த சதுர மீற்றர் அளவு | பெறுமதி | குறைவான பயன்பாட்டுடன் உள்ள காலம் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| மீபிலிமான | 413.478 | 9,230,855 | 03 வருடங்கள் |
| மஸ்கெலிய | 954.180 | 21,301,973 | 03 வருடங்கள் |
| தலவாக்கலை | 890.568 | 19,881,841 | 03 வருடங்கள் |

### 3.4 செயலாற்றல்

மக்களிடையே சமானத்தை நிலைபெறச் செய்வதன் மூலம் சமாதனமான சுற்றுச் சூழலொன்றை கட்டியெழுப்பும் நோக்கில் தென் பிரதேசத்தின் அபிவிருத்திப் பணிகளுக்காக முன்னுரிமையளித்து நாட்டின் சமநிலையான அபிவிருத்திக்கு பங்களிக்கும் பொறுப்புடன் 2015 நவம்பர் 14 ஆந் திகதிய 1942/10 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் சட்டம், சமாதானம் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சு தாபிக்கப்பட்டிருந்தது. ஒட்டுமொத்தமாக அமைச்சின் நோக்கங்கள் மற்றும் அந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்குரிய செயலாற்றல் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| நோக்கங்கள் | நோக்கங்களை அடைந்து கொள்ளல் |
|---|---|
| நாட்டில் வாழ்கின்ற சகல பிரஜைகளுக்கும் பயம் மற்றும் சந்தேகமின்றி வாழக்கூடிய சுற்றுச்சூழலொன்றை பேணிச் செல்வதற்காக தேவையான கொள்கை வழங்கல் மற்றும் வழிகாட்டல்களை மேற்கொள்ளல் | நாட்டில் அறிக்கையிடப்படும் குற்றங்களுக்குத் தீர்வு காண்பதற்கு தேவையான கொள்கை ரீதியான மற்றும் தந்திரோபாய வழிகாட்டலின் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டின்போது 1,180,805 ஆக இருந்த குற்றங்களின் எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டின் போது 1,129,555 வரை குறைவடைந்திருந்தது. அது மீளாய்வாண்டின் போது குற்றங்களின் அறிக்கையிடல் எண்ணிக்கை 1,155,215 ஆக இருந்தது. இதனிடையே அறிக்கையிடப்பட்ட சிறுவர் குற்றங்களின் தீர்த்தல் சதவீதம் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது முறையே 58, 32 மற்றும் 73 சதவீதம் என்ற மட்டத்தில் காணப்பட்டது.<br><br>சிறுவர்களுக்கு எதிராக அறிக்கையிடப்பட்ட குற்றங்கள் உட்பட பெண்களுக்கு எதிராக அறிக்கையிட்பட்ட குற்றங்களைப் பார்க்கும் போது 2014 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 14,302 ஆக இருந்ததுடன் 2015 ஆம் ஆண்டின் போது அது 14,199 வரை குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின் போது அறிக்கையிடப்பட்ட அந்த எண்ணிக்கை 14,717 ஆகும். அறிக்கையிடப்பட்ட குற்றங்களின் தீர்த்தல் சதவீதம் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே 42 சதவீதம், 68 சதவீதம் மற்றும் 56 சதவீதம் என்ற நிலையில் காணப்பட்டது. |

| | |
|---|---|
| அபாயகரமான மருந்துகளின் பாவனையைத் தவிர்த்தலும் கட்டுப்படுத்துவதற்கு உதவுதலும் | போதையை தூண்டக்கூடிய பொருட்களை கைப்பற்றும் அளவு 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது முறையே கிலோகிராம் 11,117 13,548 மற்றும் 38,872 ஆக இருந்தன. இதனிடையே கஞ்சா, கொக்கேய்ன் மற்றும் ஹெரோய்ன் போன்ற போதையை ஏற்படுத்தும் பொருட்களை கைப்பற்றுதலை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் பாரியளவில் உயர்வடைந்தமையினால் நாட்டில் போதையை தூண்டக்கூடிய பொருட்கள் புழக்கத்திலுள்ள சூழலொன்று காணப்படுகின்றமையும் வெளிப்படுத்தப்பட்டது. |
| போக்குவரத்தை இலகுபடுத்துவதற்காக மோட்டார் வாகனங்களை பரவலாக்குதல் மற்றும் வீதி நெருக்கடிகளை இழிவுபடுத்துதல் தொடர்பான சட்ட விதிகளைத் தயாரித்தல் | நாட்டில் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வாகனங்களின் அளவில் துரிதமான அபிவிருத்தியொன்று ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற அதே நேரம் அதற்கு சமமான வீதத்தில் வாகன விபத்துக்களின் அளவும் அதிகரித்துச் செல்லும் வேகம் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. |

| ஆண்டு | மொத்த விபத்துக்களின் எண்ணிக்கை | வாகனங்களின் எண்ணிக்கை | 1000 வாகனங்களுக்கு விபத்துக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2014 | 36,050 | 5,633,234 | 6 |
| 2015 | 36,918 | 6,302,141 | 6 |
| 2016 | 39,086 | 6,795,469 | 6 |

எனினும் மேற்கூறப்பட்ட மூன்று வருட காலத்தில் ஏற்பட்டிருந்த உயிரிழப்பு விபத்துக்கள், மோசமான மற்றும் உயிரிழப்பு விபத்துக்களின் மூலம் ஏற்பட்ட மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது.

| விபரம் | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|
| உயிரிழப்பு விபத்துக்கள் | 2,260 | 2,600 | 2,824 |
| மோசமான விபத்துக்கள் | 7,071 | 8,186 | 8,148 |
| மரணித்தவர்களின் எண்ணிக்கை | 2,440 | 2,816 | 3,003 |

| | |
|---|---|
| தென் மாகாணத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்குரிய ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் | மீளாய்வாண்டின் போது காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்கள் முறையே 86, 519 மற்றும் 84 என கூட்டுமொத்தமாக 689 ஆக இருந்தன. வேலை பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை காலியில் 66 உம், மாத்தறையில் 347 உம், அம்பாந்தோட்டையில் 83 உம் என கூட்டுமொத்தமாக 496 ஆக இருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 864.69 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 381.65 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. |
| தென் மாகாண அபிவிருத்தி சபையைத் தாபித்தல் | தெற்கு அபிவிருத்திச் சபை முறையாக தாபிக்கப்படும் வரை உப சபையொன்றாக செயற்படும் வகையில் அந்த உப சபையின் அங்கத்தவர்களை நியமித்தல் மற்றும் உரிய வசதிகளை வழங்குவதற்கான அமைச்சரவைக் குறிப்பிற்கு |

2016 மார்ச் 30 ஆந் திகதி அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதற்குரிய நடவடிக்கைகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தென்மாகாண அபிவிருத்திச் சபையை தாபித்தல் 2017 மே 31 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) உப சபைகளின் அலுவலகங்களின் வாடகையாக மீளாய்வாண்டின் போது ரூபா 16.77 மில்லியன் மற்றும் ஏனைய செலவினமாக ரூபா 5.22 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் தெற்கு அபிவிருத்தி நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்குரிய போதியளவான செயலாற்றலொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 89 | 65 | 24 |
| (ii) | மூன்றாம் நிலை | 352 | 241 | 111 |
| (iii) | இரண்டாம் நிலை | 10,463 | 7,743 | 2,720 |
| (iv) | ஆரம்ப நிலை | 669 | 580 | 89 |
| | மொத்தம் | 11,573 | 8,629 | 2,944 |